# <u>மாசாய் குழுவகத் தமிழ்ப்பள்ளி</u>
## <u>தமிழ்மொழி ஆண்டு 4</u>
### <u>தொடர்படத்தைக் கொண்டு 80 சொற்களில் கதை ஒன்றனை எழுதுக.</u>

இனிய காலை நேரமது. மாசாய் குழுவகத் தமிழ்ப்பள்ளி ____________________ முகாமிடக் காட்டிற்குச் சென்றனர். ரகு, சிவா மற்றும் ரவி ஆகிய மூவர் மட்டும் நெருப்பு மூட்டத் தேவையான ______________ தேடி வரச் சென்றனர்.

திடீரென அங்கிருந்த குகையில் இருந்து ஒரு சத்தம் கேட்டது. அச்சத்தம் வந்த திசையை நோக்கி ____________சென்றனர். குகையின் உள்ளே யாரோ இருவர் உரையாடும் சத்தம் கேட்டது.நண்பர்கள் இருவரும் அதனை மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிவா சற்று தூரம் சென்று பார்த்தான். இளைஞர்கள் சிலர் கூடாரம் இட்டுத் தங்கியிருப்பதைக் கண்டான். அதைக் கண்டதும் மனத்தினுள்,

“ஒரு வேளை கடத்தல்காரர்களாக இருக்குமோ?”...

எனப் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டான். உடனே நடந்ததைக் கூற தன் _____________________தேடி **குடுகுடுவென** ஓடினான்.

சிவா மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க விரைந்தோடி, தான் கண்டவற்றைத் தன் நண்பர்களிடம் கூறினான். உடனே மூவரும் ஓடிச்சென்று தங்களது _________________ தாங்கள் கண்டவற்றைக் கூறினர். ஆசிரியர் அவர்களைக் கூட்டிக் கொண்டு அவ்விடத்திற்குச் சென்றார்.

ஆசிரியர் அவர்களை நெருங்கிச் சென்றார். _______________ சென்றதும்தான் தெரிந்தது அவர்கள் அனைவரும் மாறுவேடத்தில் பணியாற்றும் வனத்துறை அதிகாரிகள் என்று. இதை அறிந்த மாணவர்கள் சிரித்துக் கொண்டனர். ஆசிரியருடன் மீண்டும் தாங்கள் _________________ இட்ட இடத்திற்குச் சென்றனர்.

| | | | |
|---|---|---|---|
| சாரணர்கள் | அருகில் | கூடாரம் | மூவரும் |
| நண்பர்களைத் | விறகுகளைத் | ஆசிரியரிடம் | |

LIVEWORKSHEETS